**சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் ஜீலை மாதம் (30.07.2021) ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.25 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

ஆணையாளர் அவர்களின் 06/2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1176,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 06/2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1177,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சியில் சட்டமன்றதேர்தல் 2021க்குரிய வாக்குச்சாவடிகள் குறித்த வரைபடங்களை தயார் செய்து மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களிடம் சமர்பிக்கும்படி மாநில தலைமை தேர்தல் அலுவலரால் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள வாக்குசாவடிகள் குறித்த வரைபடங்களை AUTO CAD-ல் இரண்டு பிரதிகளில் தயார் செய்வதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் தொகை ரூ.32,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தேர்தல் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1178,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

கீழ்ண்ட பணியினை மேற்கொள்ள 12.07.2021 மூன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் (ந.க.எண்.190/2021/எச்1)

| வ. எண் . | பணியின் பெயர் | விநியோகஸ்தர் பெயர் | விலைப்புள்ளிதொகை.ரூ. |
|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணிகளான கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் கொசு ஒழிப்பு பணிக்காக புகை மருந்து தெளிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தற்சமயம் கோடை காலம் என்பதால் அதிக அளவில் கொசு உற்பத்தியாகும் சூழ்நிலை இருப்பதால் தற்சமயம் பயன்பாட்டிற்கு அவசியமான கொசுபுகை மருந்து அடிக்க பயன்படுத்தும் புகை அடிப்பான் (Fogging machine, Hand fog -15, Pulsefog-4, Vehicle mounted machi-1)ஆகமொத்தம் 20 புகைப்பான் இயந்திரங்குலூ பழுதுநீக்கம் செய்தல். | ஓம்சக்திடெக் சர்வீசஸ், சென்னை. | 1. Vehicle mounted Fogging Machine-1 Rs.18450/-<br>2. Portable Fogging Machines, 2 Rs.9850/- |
| | | திரெட் பாஸ்ட், சென்னை. | 1. Vehicle mounted Fogging Machine-1 Rs.20200/-<br>2. Portable Fogging Machines, 2 Rs.10500/- |
| | | சக்திஇண்டஸ்ட்ரிஸ், செங்கல்பட்டு. | 1. Vehicle mounted Fogging Machine-1 Rs.19400/-<br>2. Portable Fogging Machines, 2 Rs.10200/- |

**அலுவலகக் குறிப்பு : –**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஓம் சக்தி டெக் சர்வீசஸ், சென்னை.அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1179,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.5

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உலகளாவிய தொற்று நோயான கொரோனா வைரல் தொற்று பரவுவதை தடுக்க, கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வரும் இலகரக வாகனம் (LCV)TATA ACE வாகன எண். TN 60 AV 4020 க்கு கிளட்ச் பிளேட், மற்றும் ரேடியேட்டர் ஹெட் பழுதடைந்துள்ளதை மாற்றி அமைக்க உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.18,000/– க்குமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தைநகராட்சியின் வருவாய்நிதியிலிருந்துஅனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1180,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.6

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உலகளாவிய தொற்று நோயான கொரோனா வைரல் தொற்று பரவுவதை தடுக்க, இந்நகராட்சி மூலம் கொரோனா வைரஸ் விழிப்புணர்வு விளம்பரம் தின சங்கு நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.15,000/– ம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1181,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.7

இந்நகராட்சிக்கு சொந்தமான காந்திஜி பூங்கா கட்டணக்கழிப்பறையில் வசூல் செய்யும் உரிமத்திற்கான பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 8வது முறையாக 20.07.2021 அன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்தப் புள்ளி கோரியவரின் பெயர் திரு. | ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை (ரூபாயில்) | 2020–21 குத்தகைத் தொகை | மூன்றாண்டு சராசரித் தொகை (ரூபாயில்) | | |
|---|---|---|---|---|---|---|
| 1) | எஸ். இராஜபாண்டி த.பெ சடையாண்டி கூடலூர்**(ஒப்பந்தப்புள்ளி)** | **209100/–** | 578812 | – | 369712 | **குறைவு** |
| | | | – | 551687 | 342587 | **குறைவு** |
| **2)** | மொ. முருகன் த.பெ மொக்கையத்தேவர் கூடலூர் (பொதுஏலம்) | **ஏலம் கோரப்பட வில்லை** | | | | |
| **3)** | பி. முத்துப்பாண்டி கம்பம் (பொதுஏலம்) | **ஏலம் கோரப்பட வில்லை** | | | | |

மேற்கண்ட காந்திஜிபூங்கா கட்டணக்கழிப்பறைக்கான 8வது முறையாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் (20.01.21, 02.02.21, 10.02.21, 17.02.21, 24.02.21, 29.06.21, 07.07.21, 20.07.2021) அரசு மதிப்பீட்டினை விட குறைவாகவும், ஏலத்தில் கலந்து கொண்டு தொகை கூடுதல் என காரணம் கூறி யாரும் ஏலக்கேள்வி கோரமல் இருந்து வந்த நிலையில் மேற்கண்ட திரு.எஸ்.இராஜபாண்டி என்பவர் மட்டும் முன்பணம் செலுத்தி ரூ.209100/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

**2012–13** ஏலத்தொகை ரூ. **35200/–**
**2015–16** ஏலத்தொகை ரூ. **41200/–**
**2018–19** ஏலத்தொகை ரூ. **525000/–**

மேற்கண்டவாறு கடந்த காலங்களில் ஏலம் சென்ற நிலையில் ஒருநபரால் தன்னிச்சையாக உயர்ந்தபட்சத்தில் ஏலம் கோரி மூன்றாண்டு முடிவதற்கு முன்னரே ஏலதாரர் கடும் நஷ்டம் ஏற்படுவதாக தெரிவித்து 25.06.2020 நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்து அந்த தொகையினையும் செலுத்தாமல் சென்ற நிலையில் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ள நிலையில் 04.07.2020 முதல் **துறைமூலம் வசூல் செய்யப்பட்டு வருகின்றது.**

நாள். 04.07.2020 முதல் 31.07.2020 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 26588/–
நாள். 01.08.2020 முதல் 31.08.2020 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. **30217/–**
நாள். 01.09.2020 முதல் 30.09.2020 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 29800/–

நாள். 01.10.2020 முதல் 31.10.2020 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 28470/–

நாள். 01.11.2020 முதல் 30.11.2020 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 25060/–

நாள். 01.12.2020 முதல் 31.12.2020 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 24970/–

நாள். 01.01.2021 முதல் 31.01.2021 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 23400/–

நாள். 01.02.2021 முதல் 28.02.2021 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 22180/–

நாள். 01.03.2021 முதல் 31.03.2021 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 25690/–

––––––––––––––––––

மொத்தம் ரூ. 236375/–

––––––––––––––––––––

மேற்கண்டவாறு 9 மாதங்களில் துறைரீதியாக வசூல் செய்யப்பட்டதில் கிடைக்கப்பெற்ற மாதவருவாய் சாராசரியாக ரூ. 30217/–

**கடந்த ஆண்டு குத்தகைத் தொகை ரூ. 578812/– ஆகும்.**

**மாதம் ஒன்றுக்கு ரூ. 578812/12= 48234 x 9 = 434106/-**

துறை ரீதியாக வசூல் செய்யப்பட்டதில் கிடைத்த வருவாய் **ரூ.236375/– மட்டுமேயாகும்.**

**இக்கட்டணக் கழிப்பறை வசூல் செய்வதற்கு நகராட்சியின் மூலம் ஆகும் செலவினம்**

2 (காலை, மாலை) வசூல் பணியாளர்க்கான ஒரு மாத ஊதியம் ரூ. 48000/–

1 மாதத்திற்கான கட்டண இரசீதுகள் 200x30= 6000 ற்கு 3000/–

––––––––

1 மாதத்திற்கான துறை ரீதியான செலவினம் 51000/–

–––––––––

1 வருடத்திற்கான நிர்வாகச் செலவினம் **ரூ 51000** x **12** = **612000/–** ஆகின்றது.

குத்தகைத்தொகை –நிர்வாக செலவினம் = இழப்பு

ரூ **578812** – **612000** = கூடுதல் நகராட்சிக்கு ஏற்படும் செலவினம் ரூ. **33188/–**

வசூல் மூலம் வரப்பெற்ற வருவாய் மூலம் இழுப்பு

குத்தகைத்தொகை –துறைரீதியான வசூல் = இழப்பு

ரூ **434106** – **236375** = கூடுதல் நகராட்சிக்கு ஏற்படும் செலவினம் ரூ. **197731/–** ஆகும்.

–––––––––––––––

நகராட்சிக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ. **230919/–**

–––––––––––––––

தற்போது கேட்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ. **209100**/12= மாதம் ஒன்றுக்கு ரூ **17425/–**

மேற்படி நிலைபாடுகள் மற்றும் கணக்கீடுகளின்படி நகராட்சிக்கு வருவாய் ஏதுமின்றி கூடுதல் செலவினம் மட்டுமே ஏற்படும் நிலை உள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றின் காரணமாகவும், தனிநபர் கழிப்பிடம் அதிகளவில் கட்டப்பட்டுள்ளதால் பொதுமக்கள் கட்டணக்கழிப்பறைக்கு வருவது முற்றிலும் குறைந்து விட்ட காரணத்தினாலும் நோய்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பணியாளர்களின் பற்றாக்குறையாக உள்ள நிலையில், இதற்கென தனியே பணியாளர் நியமித்து தொடர்ந்து வசூல் செய்வதன் மூலம் அதிக செலவினம் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த இனத்திற்கு பலமுறை பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் பலர் கலந்து கொண்டு குறைவான தொகைக்கு கோரிய காரணத்தினாலும் தற்போது தொடர்ந்து ஏற்படும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு 8வது முறையாக கோரிய பொதுஏலம்/ ஒப்பந்தபுள்ளியில் திரு.எஸ்.இராஜபாண்டி த/பெ சடையாண்டி என்பவரால் கோரப்பட்ட **ரூ.209100/–க்**கான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மேற்கண்ட குத்தகைஇனத்தினை துறைரீதியாக வசூல் செய்யப்படுவதால் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு **8**வது முறையாக நடத்தப்பட்ட பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் திரு.எஸ்.இராஜபாண்டி த/பெ சடையாண்டி என்பவரால் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையான **ரூ.209100/–**ஐ மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1182,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.8

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கட்டணக்கழிப்பறையில் வசூல் செய்யும் உரிமத்திற்கான பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 8வது முறையாக 20.07.2021 அன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்தப் புள்ளி கோரியவரின் பெயர் திரு. | ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை (ரூபாயில்) | 2020–21 குத்தகைத் தொகை | மூன்றாண்டு சராசரித் தொகை (ரூபாயில்) | | |
|---|---|---|---|---|---|---|
| 1) | அ. கொடியரசன் த.பெ அய்யாவுத்தேவர் கூடலூர்**(ஒப்பந்தப்புள்ளி)** | 512100/- | 933818 | - | 421718 | **குறைவு** |
| | | | - | 890056 | 377956 | **குறைவு** |

மேற்கண்ட புதிய பேருந்து நிலைய கட்டணக்கழிப்பறைக்கான 8வது முறையாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் (20.01.21, 02.02.21, 10.02.21, 17.02.21, 24.02.21, 29.06.21, 07.07.21, 20.07.2021) அரசு மதிப்பீட்டினை விட குறைவாகவும், ஏலத்தில் கலந்து கொண்டு தொகை கூடுதல் என காரணம் கூறி யாரும் ஏலக்கேள்வி கோரமல் இருந்து வந்த நிலையில் மேற்கண்ட திரு.அ. கொடியரசன் என்பவர் மட்டும் முன்பணம் செலுத்தி ரூ. 512100/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

**2012–13** ஏலத்தொகை ரூ. **115100/–**
**2015–16** ஏலத்தொகை ரூ. **141000/–**
**2018–19** ஏலத்தொகை ரூ. **847000/–**

மேற்கண்டவாறு கடந்த காலங்களில் ஏலம் சென்ற நிலையில் ஒருநபரால் தன்னிச்சையாக உயர்ந்தபட்சத்தில் ஏலம் கோரி மூன்றாண்டு முடிவதற்கு முன்னரே ஏலதாரர் கடும் நஷ்டம் ஏற்படுவதாக தெரிவித்தும் தொகையினை செலுத்தாமலும் நிலுவையாக இருந்து வருகின்றது

**கடந்த ஆண்டு குத்தகைத் தொகை ரூ. 933818/– ஆகும்.**

**மாதம் ஒன்றுக்கு ரூ. 578812/12= 77818/-**

**இக்கட்டணக் கழிப்பறைக்கு துறைமூலம் வசூல் செய்வதால் ஆகும் செலவினம்**
2 (காலை, மாலை) வசூல் பணியாளர்க்கான ஒரு மாத ஊதியம் ரூ. 48000/–
1 மாதத்திற்கான கட்டண இரசீதுகள் 200x30= 6000 ற்கு 3000/–
மின்கட்டணம் மாதமொன்றுக்கு 8000/–
--------
1 மாதத்திற்கான துறை ரீதியான செலவினம் 59000/–
--------

1 வருடத்திற்கான நிர்வாகச் செலவினம் **ரூ 59000** x 12 = **708000/– ஆகின்றது.**
தற்போது துறை மூலம் வசூலிக்கப்பட்டுவரும் தொகை
**04/2021** ரூ. **29451/–**
**05/2021** ரூ. **24110/–**
**06/2021** ரூ. **24985/–**
**07/2021** ரூ. **20286/–**
மாதமொன்றுக்கு உயர்ந்தபட்ச துறைரீதியான வசூல் தொகை ரூ. **29451** ஆகும்
வருடத்திற்கு ஆகும் உத்தேச வசூல் ரூ. 29451 x 12 = **353412/–**

நிர்வாக செலவினம் – துறைரீதியான வசூல் = இழப்பு
ரூ **708000– 353412** = கூடுதல் நகராட்சிக்கு ஏற்படும் செலவினம் ரூ. **354588/–** ஆகும்.
--------
நகராட்சிக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ. **354588/–**
--------

தற்போது கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ. **512100/12**= மாதம் ஒன்றுக்கு ரூ **42675/–**

மேற்படி நிலைபாடுகள் மற்றும் கணக்கீடுகளின்படி நகராட்சிக்கு வருவாய் ஏதுமின்றி கூடுதல் செலவினம் மட்டுமே ஏற்படும் நிலை உள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றின் காரணமாக போக்குவரத்து குறைவாகவும், கேரள மக்கள் வருகை இல்லாததால் ஏற்டும் பாதிப்பு மற்றும் தனிநபர் கழிப்பிடம் அதிகளவில் கட்டப்பட்டுள்ளதாலும் பொதுமக்கள் கட்டணக்கழிப்பறைக்கு வருவது முற்றிலும் குறைந்து விட்ட நிலையில், நோய்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பணியாளர்களின் பற்றாக்குறையாக உள்ளதால், இதற்கென தனியே பணியாளர் நியமனம் செய்து வசூல் செய்வதன் மூலம் அதிக செலவினம் ஏற்படும் சூழ்நிலையே ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த இனத்திற்கு பலமுறை பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் பலர் கலந்து கொண்டும் குறைவான தொகைக்கே ஏலம் கோரிவருவதால் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு 8வது முறையாக கோரிய பொதுஏலம்/

ஒப்பந்தபுள்ளி கோரியதில் திரு.அ.கொடியரசன் த/பெ அய்யாவுத்தேவர் என்பவரால் வழங்கப்பட்ட **ரூ.512100/–க்**கான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மேற்கண்ட குத்தகை இனத்தினை துறைரீதியாக வசூல் செய்யப்படுவதால் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு **8**வது முறையாக நடத்தப்பட்ட பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் திரு.அ.கொடியரசன் த/பெ அய்யாவுத்தேவர் என்பவரால் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையான **ரூ.512100/–**ஐ மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1183,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.9**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தினசரிசந்தையில் வசூல் செய்யும் உரிமத்திற்கான பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 9வது முறையாக 28.07.2021 அன்று கோரப்பட்டதில் முன்பணம் செலுத்தி பொதுஏலம் யாரும் கோரப்படவில்லை. ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்தப் புள்ளி கோரியவரின் பெயர் திரு. | ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை (ரூபாயில்) | 2020–21 குத்தகைத் தொகை | மூன்றாண்டு சராசரித் தொகை (ரூபாயில்) | | |
|---|---|---|---|---|---|---|
| 1) | சி.கர்ணன் த/பெ சிவனாண்டித் தேவர் கூடலூர் **(ஒப்பந்தப்புள்ளி)** | **460000/–** | 771971 | – | 311971 | **குறைவு** |
| | | | – | 735794 | 275794 | **குறைவு** |
| 2) | க. மாயத்தேவர் த.பெ கருப்பத்தேவர் கூடலூர் **(ஒப்பந்தப்புள்ளி)** | 466100/– | 771971 | – | 305871 | **குறைவு** |
| | | | – | 735794 | 269694 | **குறைவு** |

மேற்கண்ட தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 9வது முறையாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் (20.01.21, 02.02.21, 10.02.21, 17.02.21, 24.02.21, 29.06.21, 07.07.21, 20.07.2021 மற்றும் 28.07.2021) அரசு மதிப்பீட்டினை விட குறைவாகவும், ஏலத்தில் கலந்து கொண்டு தொகை கூடுதல் என காரணம் கூறி யாரும் ஏலக்கேள்வி கோராமல் தொடர்ந்து வரப்பெற்றது.

**2012–13** ஏலத்தொகை ரூ. **92000/–**
**2015–16** ஏலத்தொகை ரூ. **106200/–**
**2018–19** ஏலத்தொகை ரூ. **700200/–**

மேற்கண்டவாறு கடந்த காலங்களில் ஏலம் சென்ற நிலையில் ஒருநபரால் தன்னிச்சையாக உயர்ந்தபட்சத்தில் ஏலம் கோரி மூன்றாண்டு முடிவதற்கு முன்னரே ஏலதாரர் கடும் நஷ்டம் ஏற்படுவதாக தெரிவித்தும் தொகையினை செலுத்தாமலும் நிலுவையாக இருந்து வருகின்றது

**கடந்த ஆண்டு குத்தகைத் தொகை ரூ. 771971/– ஆகும்.**

**மாதம் ஒன்றுக்கு ரூ. 771971/12= 64331/-**

**தினசரி சந்தை வசூல் செய்யும் உரிமைக்கு துறைமூலம் வசூல் செய்வதால் ஆகும் செலவினம்**

2 (காலை, மாலை) வசூல் பணியாளர்க்கான ஒரு மாத ஊதியம் ரூ. 48000/–
1 மாதத்திற்கான இரசீதுகள் 200x30= 6000 ற்கு 3000/–
---------
1 மாதத்திற்கான துறை ரீதியான செலவினம் 51000/–
---------

1 வருடத்திற்கான நிர்வாகச் செலவினம் **ரூ 51000** x **12** = **612000/–** ஆகின்றது.
தற்போது துறை மூலம் வசூலிக்கப்பட்டுவரும் தொகை
**04/2021** ரூ. **15155/–**
**05/2021** ரூ. **6330/–**
**06/2021** ரூ. **7960/–**
**07/2021** ரூ. **8836/–**

மாதமொன்றுக்கு உயர்ந்தபட்ச துறைரீதியான வசூல் தொகை ரூ. **15155** ஆகும்
வருடத்திற்கு ஆகும் உத்தேச வசூல் ரூ. 15155 x 12 = **181860/–**

நிர்வாக செலவினம் – துறைரீதியான வசூல் = இழப்பு
ரூ **612000– 181860** = கூடுதல் நகராட்சிக்கு ஏற்படும் செலவினம் ரூ. **430140/–** ஆகும்.
---------------
நகராட்சிக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ. **430140/–**
---------------

தற்போது கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ. 466100/12= மாதம் ஒன்றுக்கு ரூ 38842/–

மேற்படி நிலைபாடுகள் மற்றும் கணக்கீடுகளின்படி துறைமூலம் தொடர்ந்து வசூல்செய்திடும் பட்சம் நகராட்சிக்கு வருவாய் ஏதுமின்றி கூடுதல் செலவினம் மட்டுமே ஏற்படும் என்பதாலும், தினசரி சந்தையினை வசூல் செய்திட இரண்டு பணியாளர்களால் இயலாது. அத்துடன் கொரோனா நோய் தொற்று காரணமாக கேரளாவிற்கு வாகனங்கள் செல்ல இயலாத காரணத்தினால் போதிய காய்கறிகள் வாகனங்கள் வரத்து குறைவாக உள்ளதால் தொடர்ந்து நிதியிழப்பு ஏற்பட்டு வருகின்றது. மேலும் நோய்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பணியாளர்களின் பற்றாக்குறையாக உள்ளதால், இதற்கென தனியே பணியாளர் நியமனம் செய்து வசூல் செய்வதன் மூலம் அதிக செலவினம் ஏற்படும் நிலையில் பலமுறை பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் பலர் கலந்து கொண்டும் குறைவான தொகைக்கே ஏலம் கோரிவருவதாலும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு 9வது முறையாக பொதுஏலம்/ஒப்பந்துபுள்ளி கோரியதில் திரு.க.மாயத்தேவர் த/பெ கருப்பத்தேவர் என்பவரால் **ரூ.466100/–** க்கான கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மேற்கண்ட குத்தகைஇனத்தினை துறைரீதியாக வசூல் செய்யப்படுவதால் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு 9வது முறையாக நடத்தப்பட்ட பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் திரு.க.மாயத்தேவர் த/பெ கருப்பத்தேவர் என்பவரால் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையான **ரூ.466100/–**ஐ மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1184,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.10**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆடு அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கான பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 9வது முறையாக 28.07.2021 அன்று கோரப்பட்டதில் முன்பணம் செலுத்தி பொதுஏலம் யாரும் கோரப்படவில்லை. ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்தப் புள்ளி கோரியவரின் பெயர் திரு. | ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை (ரூபாயில்) | 2020–21 குத்தகைத் தொகை | மூன்றாண்டு சராசரித் தொகை (ரூபாயில்) | | |
|---|---|---|---|---|---|---|
| 1) | சி.கர்ணன் த/பெ சிவனாண்டித் தேவர் கூடலூரார் **(ஒப்பந்தப்புள்ளி)** | **161000/–** | **396900** | **–** | **235900** | **குறைவு** |
| | | | **–** | **378300** | 217300 | **குறைவு** |
| 2) | க. மாயத்தேவர் த.பெ கருப்பத்தேவர் கூடலூரார் **(ஒப்பந்தப்புள்ளி)** | **155000/–** | **396900** | **–** | **241900** | **குறைவு** |
| | | | **–** | **378300** | 223300 | **குறைவு** |

மேற்கண்ட ஆடுஅடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 9வது முறையாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் (20.01.21, 02.02.21, 10.02.21, 17.02.21, 24.02.21, 29.06.21, 07.07.21, 20.07.2021 மற்றும் 28.07.2021) அரசு மதிப்பீட்டினை விட குறைவாகவும், ஏலத்தில் கலந்து கொண்டு தொகை கூடுதல் என காரணம் கூறி யாரும் ஏலக்கேள்வி கோராமல் தொடர்ந்து வரப்பெற்றது.

**2012–13** ஏலத்தொகை ரூ. **85200/–**
**2015–16** ஏலத்தொகை ரூ. **96100/–**
**2018–19** ஏலத்தொகை ரூ. **360000/–**

மேற்கண்டவாறு கடந்த காலங்களில் ஏலம் சென்ற நிலையில் ஒருநபரால் தன்னிச்சையாக உயர்ந்தபட்சத்தில் ஏலம் கோரி மூன்றாண்டு முடிவதற்கு முன்னரே ஏலதாரர் கடும் நஷ்டம் ஏற்படுவதாக தெரிவித்தும் தொகையினை செலுத்தாமலும் நிலுவையாக இருந்து வருகின்றது

**கடந்த ஆண்டு குத்தகைத் தொகை ரூ. 396900/– ஆகும்.**
**மாதம் ஒன்றுக்கு ரூ. 396900/12= 33075/-**
**துறைமூலம் வசூல் செய்வதால் ஆகும் செலவினம்**

| | |
|---|---|
| 1வசூல் பணியாளர்க்கான ஒரு மாத ஊதியம் | ரூ. 24000/– |
| 1 மாதத்திற்கான இரசீதுகள் 50x30= 1500 ற்கு | 1400/– |
| 1 மாதத்திற்கான துறை ரீதியான செலவினம் | 25400/– |

1 வருடத்திற்கான நிர்வாகச் செலவினம் **ரூ 25400 x 12 = 304800/– ஆகின்றது.**
தற்போது துறை மூலம் வசூலிக்கப்பட்டுவரும் தொகை
04/2021 ரூ. 13500/–
05/2021 ரூ. 12350/–
06/2021 ரூ. 15950/–
07/2021 ரூ. 16200/–

மாதமொன்றுக்கு உயர்ந்தபட்ச துறைரீதியான வசூல் தொகை ரூ. **16200/–** ஆகும்
வருடத்திற்கு ஆகும் உத்தேச வசூல் ரூ. 16200 x 12 = **194400/–**

நிர்வாக செலவினம் **–** துறைரீதியான வசூல் = இழப்பு
ரூ.**304800**– **194400** = கூடுதல் நகராட்சிக்கு ஏற்படும் செலவினம் ரூ. **110400/–** ஆகும்.
––––––––––––––––
நகராட்சிக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ. **110400/–**
––––––––––––––––

தற்போது கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ. **161000/12**= மாதம் ஒன்றுக்கு ரூ **13433/–**

மேற்படி நிலைபாடுகள் மற்றும் கணக்கீடுகளின்படி துறை மூலம் தொடர்ந்து வசூல்செய்திடும் பட்சம் நகராட்சிக்கு வருவாய் ஏதுமின்றி கூடுதல் செலவினம் மட்டுமே ஏற்படும் என்பதாலும், கொரோனா நோய் தொற்று காரணமாக வசூல் செய்வதில் இழுபறிநிலை ஏற்பட்டு வருவதாலும், மேலும் நோய்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பணியாளர்களின் பற்றாக்குறையாக உள்ளதால், இதற்கென தனி பணியாளர் நியமித்து வசூல் செய்வதன் மூலம் அதிக செலவினம் ஏற்படும் நிலையில் பலமுறை பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் பலர் கலந்து கொண்டும் குறைவான தொகைக்கே ஏலம் கோரியும் கடைசியில் பின்வாங்கி சென்றுவிடுவதாலும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு 9வது முறையாக கோரிய பொது ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரியதில் திரு.சி.கர்ணன் த/பெ சிவனாண்டித்தேவர் என்பவரால் வழங்கப்பட்ட **ரூ.161000/–**க்கான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மேற்கண்ட குத்தகை இனத்தினை துறைரீதியாக வசூல் செய்யப்படுவதால் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு **9**வது முறையாக நடத்தப்பட்ட பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் திரு.சி.கர்ணன் த/பெ சிவனாண்டித்தேவர் என்பவரால் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொயைான **ரூ.161000/–**ஐ மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1185,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.11**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**1167** நாள் **.30.06.2021** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **16.07.2021** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில் | நிறுவனத்தாரின் பெயர் | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி **(TN 60 Y 8120) FC** வேலைகள் செய்தல் | 1.35 | திரு.S.முருகன், கம்பம் | – 4.88 | – |
| | | | திரு.P.முருகன், கம்பம் | – | 0,00 |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ள திரு.P.முருகன், கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**தீர்மான எண்.1186,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.12

கூடலூர் நகராட்சி வார்டு எண்–02,பட்டாளம்மன் கோவில் தெருவில் தாழ்வாக அமைந்துள்ள சிறு பாலத்தினை புதிதாக அமைக்கும் பணிக்கு ரூ.2.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1187,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.13

கூடலூர் நகராட்சி வார்டு எண்–05, AMC சர்ச் தெருவில் சிறு பாலம் மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் பணிக்கு ரூ.1.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1188,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.14

கூடலூர் நகராட்சி வார்டு எண்–14,முத்துச்சாமி கவுடர் தெரு மற்றும் எல்.எப்.சாலை முகப்பில் அமைந்துள்ள தாழ்வான பாலத்தினை அகற்றி புதிதாக சிறு பாலம் அமைப்பதற்கு ரூ.0.85 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1189,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.15

கூடலூர் நகராட்சி வார்டு எண்–20,ஒட்டார் தெரு மற்றும் காமாட்சியம்மன் கோவில் தெரு சந்திக்கும் இடத்தில் ஏற்கனவே தாழ்வாக அமைந்துள்ள கல்பாலத்தினை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலம் அமைக்க ரூ.0.85 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1190,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.16

கூடலூர் நகராட்சி வார்டு எண்–01,பசும்பொன் நகர் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்க ரூ.0.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1191,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.17

கூடலூர் நகராட்சி வார்டு எண்–7,எல்லை தெரு மற்றும் பஜார் தெருவில் சந்திக்கும் இடத்தில் ஏற்கனவே உள்ள சிறு பாலம் சேதமடைந்த நிலையில் உள்ளதை புதிதாக அமைக்க ரூ.0.55 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1192,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.18**

கூடலூர் நகராட்சி வார்டு எண்–17, இராஜீவ் காந்தி நகர் தெருவில் புதிதாக பகிர்மான குழாய் புதிதாக அமைக்க ரூ.3.25 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1193,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.19**

கூடலூர் நகராட்சி வார்டு எண்–09, எல்லை தெருவில் சேதமடைந்த பேவர் பிளாக் சாலையினை சீரமைப்பதற்கு ரூ.1.60 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1194,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.20**

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) மனுவில் திரு.முரளி மகாராஜன் என்பவர் கேட்டுகொண்டதன்படி வார்டு எண்–1,எல்லை தெருவில் மழைநீர் வடிகால் அமைக்க ரூ.1.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1195,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.21**

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) மனுவில் திரு.ஸ்டாலின் என்பவர் இந்நகராட்சி பகுதி கேட்டுகொண்டதன்படி வார்டு எண்–14, எல்.எப் சாலை கிழக்கு பகுதியில் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்க ரூ.2.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1196,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.22**

கூடலூர் நகராட்சியில் வருமானவரி (IT) மற்றும் சரக்கு மீதான சேவை வரி (ழுளுகூ) ஆகியவை E-FILING செய்தமைக்குரிய பட்டியல் தொகை ரூ.19,550/- மற்றும் ரூ.14,500/- ஆக மொத்தம் ரூ.34,050/-ஐ ALAYAM ASSOCIATES திரு.S.ராமநாதன் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1197,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.23**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்காக **2021–2024** மூன்றாண்டுகளுக்கு **20.01.2021** முதல் **07.07.2021** முடிய 7முறை (20.01.21, 02.02.21, 10.02.21, 17.02.21, 24.02.21, 29.06.21, 07.07.21) பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரப்பட்டது. ஆனால் ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள் அரசு மதிப்பீட்டினை விட குறைவாகவும், ஏலத்தில் கலந்து கொண்டு பொறுப்புத்தொகை, கூடுதல் பொறுப்பு தொகை கீழ்க்கண்டவாறு கூடுதல் என காரணம் கூறி யாரும் ஏலக்கேள்வி கோர யாரும் முன்வரவில்லை.

| குத்தகை இனம் எண் | ஏலம் விடப்படும் இனங்களின் விபரம் | பொது ஏலம் / ஒப்பந்தப் புள்ளிக்கான பொறுப்புத் தொகை ரூபாய் | கூடுதல் பொறுப்பு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | தினசரி சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 3,00,000 | 2,00,000 |
| 2 | ஆடு அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 2,00,000 | 1,00,000 |
| 3 | காந்திஜி பூங் காவில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1,00,000 | 1,00,000 |
| 5 | வைரவன் வாய்க்காலில் உள்ள தென்னை மற்றும் இலவமரங்களின் மேற்பலன் அனுபவிக்கும் உரிமம். | 40,000 | 25,000 |
| 6 | பேருந்து நிலையத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 4,00,000 | 2,00,000 |
| 9 | அண்ணா பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,50,000 | 1,50,000 |

எனவே, நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு 8வது முறையாக நடத்தப்படும் ஏலத்தில் இருந்து கீழ்க்கண்டவாறு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி பொறுப்புத்தொகை, கூடுதல் பொறுப்பு தொகையினை கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு,

| குத்தகை இனம் எண் | ஏலம் விடப்படும் இனங்களின் விபரம் | பொது ஏலம் / ஒப்பந்தப் புள்ளிக்கான பொறுப்புத் தொகை ரூபாய் | கூடுதல் பொறுப்பு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | தினசரி சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 3,00,000 | 1,00,000 |
| 2 | ஆடு அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 2,00,000 | 1,00,000 |
| 3 | காந்திஜி பூங் காவில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1,00,000 | 1,00,000 |
| 5 | வைரவன் வாய்க்காலில் உள்ள தென்னை மற்றும் இலவமரங்களின் மேற்பலன் அனுபவிக்கும் உரிமம். | 20,000 | 10,000 |
| 6 | பேருந்து நிலையத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 4,00,000 | 1,00,000 |
| 9 | அண்ணா பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,50,000 | 75,000 |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட குத்தகை இனங்களை துறைரீதியாக வசூல் செய்யப்படுவதால் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு 8வது முறையாக நடத்தப்படும் ஏலத்தில் இருந்து பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் பொறுப்புத்தொகை, கூடுதல் பொறுப்பு தொகை திருத்தம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1198,அனுமதிக்கப்பட்டது.**